1967 ஜூலை 14]

இராமநாதபுரம், திருச்சி, சேலம், தருமபுரி ஆகிய இடங்களிலும் படிப்படியாக ஆராய்ச்சி நிலையங்களை நிறுவுவதற்கு அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

குடியாத்தம் வட்டத்தில் கசிவு நீர் ஏரிகள்

*** 341 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குடியாத்தம் தாலூக்காவில் Percolation tanks திட்டம் நடைபெறுகிறதா ?

(இ) ஆம் எனில், எங்கெங்கே, அவற்றின் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :

(அ) ஆம்.

(இ) 1966-67, 1967-68-ம் ஆண்டுகளில் குடியாத்தம் தாலூகாக்களிலுள்ள கீழ்க்கண்ட கிராமங்களில் கசிவுநீர் ஏரிகளை தோண்டவும் புதுப்பிக்கவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது—

(1) செங்குன்றம்.

(2) கொண்ட சமுத்திரம்.

(3) சேத்துபண்டை.

(4) மூட்டாளம்.

செங்குன்றத்தில் (நெத்தான குட்டை) வேலை நடந்து வருகிறது. எஞ்சிய கிராமங்களிலும், ஏரிகளைத் தோண்டுவதற்கும் புதுப்பிப்பதற்கும், உரிய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

திரு. வி. கே. கோதண்டராமன் : மலைப் பிரதேசங்களில் பெரு மழை பெய்து, வெள்ளம் ஏற்பட்டு, காட்டாறுகளாக ஓடும்போது, அங்குள்ள நிலத்தின் மண்வளம் நாசமாவதோடு, விவசாயம் செய்திருந்தால் அதுவும் நாசமாகி, விவசாய அபிவிருத்தி பாதிக்கப்பட்டு, உணவு உற்பத்தி தடைபடுகிறது. குடியாத்தம் ஒரு பக்கத்தில் ஆந்திரத்தையும், இன்னொரு பக்கத்தில் மைசூரையும் எல்லைகளாகக் கொண்டுள்ள மலைப் பிரதேசம் நிறைந்த பகுதியாகும். ஆகவே, இதற்கு விசேஷ கவனம் செலுத்தி, இதுபோன்ற பெர்கொலேஷன் டாங்குகளை அதிகப்படியாக ஏற்பாடு செய்வதற்கு உடனடியாக உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நான் ஆரம்பத்திலே குறிப்பிட்டதுபோல, அதற்கு வேண்டிய திட்டங்களை அரசு தீட்டி வருகிறது. அதற்காகத்தான் இப்பொழுது அந்த மண்ணையும் வண்டலையும் அடித்துக்கொண்டு போகாமலிருக்க, ஆங்காங்கு ஓடைக்கு எதிர்ப்புறங்களில் காட்டை அமைத்து அதன் மூலம் மண் அரிப்பதைத் தடுத்துக்கொண்டு வருகிறோம். மேலும் மத்திய அரசாங்கம் இதற்காக 15 சத வீதம் மானியமாகவும் 60 சதவீதம் கடனாகவும் அளிக்கிறார்கள். எஞ்சிய தொகையை மாநில அரசாங்கம் செலவு செய்து தேவையான இடங்களில் பெர்கொலேஷன் டாங்குகளை அமைக்கும்.

அரிசன நலப் பள்ளி ஆசியர்களுக்கு வீடுகள்

*** 342 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய அரிஜன நல செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1967-68-ல் தென் ஆர்க்காடு ஜில்லாவில் ஹரிஜன நல இலாக்காவின் கீழுள்ள ஹரிஜனநல பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்கள் ஆசிரியைகள் ஆகியவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு டாக்டர். (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) இல்லை. 1967–68-ம் ஆண்டுக்கு அத்தகைய திட்டம் எதுவுமில்லை.

(இ) இக் கேள்வி எழவில்லை.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : ஐயா, ஆசிரியர்கள் உள்ளூரில் குடியிருந்தால்தான் பள்ளியை நல்ல முறையில் கவனிக்கமுடியும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் ஆசிரியர்கள் உள்ளூரில் குடியிருப்பதற்கு இடவசதி செய்து கொடுக்காத காரணத்தால் பல ஆசிரியர்கள் வெளியூர்களிலிருந்து வருகிறார்கள். ஆகவே, உள்ளூரில் குடியிருக்க வேண்டும் என்ற திட்டத்தை குறிப்பாக சிதம்பரம் தாலுகாவில் அந்தத் திட்டத்தை அரசாங்கம் அமுல் நடத்துமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஆசிரியர்களுக்கு உள்ளூரிலேயே வீடு கட்டிக் கொடுக்கிற அவசியத்தை இந்த சர்க்கார் உணருகிறது. ஆனால் இப்போதிருக்கும் நிதிநிலையை உத்தேசித்து, இந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

திரு. கே. விநாயகம் : தலைவர் அவர்களே, ஹரிஜனங்களுக்கென்று தனியே பள்ளிக்கூடம் அமைத்தது பழையகால சரித்திரம். ஆனால் அந்தப் பள்ளிக்கூடங்களைத் தொடர்ந்து நடத்துவதன் மூலமாக, ஹரிஜனங்கள் வேறு வகுப்பு என்ற உணர்ச்சி தென்படுகிறது. ஆகவே, அவர்களுக்கென்று தனி பள்ளிக்கூடம் வைக்காமல், அந்தப் பள்ளிக்கூடங்களையெல்லாம் அரசாங்கமோ அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலோ எடுத்து நடத்தி, ஜாதி வித்தியாசங்களைப் போக்க காருண்யமுள்ள சர்க்கார் கவனம் செலுத்துமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கனம் உறுப்பினர் அவர்களுடைய கருத்தை காருண்யமுள்ள சர்க்கார் கவனித்து வருகிறது.

பீடித் தொழிலாளர்களின் பாதுகாப்பு

* 343 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய சட்ட-கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) பீடி தொழிலாளர்களின் பாதுகாப்பு சட்டம் எந்த ஆண்டில் நிறைவேறப்பட்டது.

(இ) இதுவரை அமுல் படுத்தாதற்கான காரணமென்ன ?

(உ) அதை அமுலாக்கும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) தமிழக 1958-ம் ஆண்டு பீடித் தொழில் மனைகள் (பணி நிலைமைகள் முறைப்படுத்தல்) சட்டம் 1958-ம் ஆண்டு இயற்றப்பட்டது.

(இ) அண்டை மாநிலங்களில் இத்தகைய சட்டம் இல்லாததால், இச் சட்டத்தின் உரிய விதித்துறைகள் மட்டுமே செயல்படுத்தபடுகின்றன.

(உ) இக் கேள்வி எழவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்த சர்க்கார் பீடித் தொழிலாளர்களுக்கான ஒரு சட்டத்தை இயற்றி, ஒன்பது பத்து வருஷக்காலம் வரையிலே அதை அமுல்படுத்தாமலே இருந்து * * * வந்தார்கள். ஆகவே, இப்போது இருக்கிற சர்க்காராவது மாதக் கணக்கில்—வருடக் கணக்கில் என்று எடுத்துக்கொள்ளாமல் உடனடியாக பீடித் தொழிலாளருக்கான சட்டத்தை அமுல்படுத்த முடியுமா ?

---

* பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.